## குளித்தலை நகராட்சி

21.01.2022ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. தமிழ்நாடு அரசு நிதி(படிகள்) துறை, அரசாணை(நிலை) எண்.1, நாள்–01.01.2022ன்படி, மிகை ஊதியம் 2020–2021ம் கணக்கு ஆண்டிற்கு தற்காலிக மிகை ஊதியம் / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் வழங்குதல் ஒப்பளிப்பு – ஆணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.54/2022/சி1)

பொருள்– 02. தமிழ்நாடு அரசு நிதி(படிகள்) துறை, அரசு ஆணை எண்.3, நாள்–01.01.2022ன்படி, அகவிலைப்படி 17%-லிருந்து 28%-ஆகவும் மற்றும் 28%-லிருந்து 31%-ஆகவும், உயர்த்தப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.51/2022/சி1)

பொருள்– 03. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் கைப்பம்ப் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான உதிரிபாகங்கள் விநியோகம் செய்ய, 20.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான உதிரிபாகங்கள் விநியோகம் செய்தல் | A.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.13 % குறைவு |
| | | நந்தினி ஏஜென்சீஸ், குளித்தலை. | 1.81 % அதிகம் |
| 2 | குடிநீர் பிரிவு கைப்பம்புகள் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான உதிரிபாகங்கள் விநியோகம் செய்தல் | A.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.21 % குறைவு |
| | | நந்தினி ஏஜென்சீஸ், குளித்தலை. | 4.58 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண்.1 மற்றும் 2க்கு மதிப்பீட்டைவிட குறைந்த சதவீதத்தில் குறிப்பிட்டுள்ள திரு. A.மாதேஸ்வரன், குளித்தலை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2). வரிசை எண்.1க்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்தும், வரிசை எண்.2க்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்தும் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்– 04. இந்நகராட்சியின்மூலம் 15வது நிதிக்குழு மான்யம் 2020–2021ஆம் ஆண்டு Tied and Grant திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு 06.01.2021 மற்றும் 20.01.2022 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| | **06.01.2022ஆம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்** | | |
| 1 | குடிநீர் விநியோகம் செய்வதற்கான குளோரின் திரவம் விநியோகம் செய்தல் | M/s.M.R.Dyes Chemicals | 1.25 % குறைவு |
| | | M/s.Rakshita Chimcals | 3.13 % அதிகம் |
| 2 | பேட்டரியில் இயங்கும் வாகனம் 14 எண்ணிக்கைகள் பராமரிப்பு பணி செய்தல் | M/s.பிரியம் இண்டஸ்ட்ரீஸ் | 0.06 % குறைவு |
| | | M/s.அருள் இந்தியன் மோட்டார்ஸ் | 0.09 % அதிகம் |
| 3 | வார்டு எண்.16, வையாபுரிநகர் பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | திரு.P.அண்ணாத்துரை குளித்தலை. | 4.95 % அதிகம் |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 5.26 % அதிகம் |
| 4 | வார்டு எண்.19, கொல்லம்பட்டரை தெரு பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 4.95 % அதிகம் |
| | | திரு.R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 5.27 % அதிகம் |
| 5 | வார்டு எண்.7, கடம்பர்கோவில் எதிர்புறம் (காவேரி ஆற்றுக்கரை அருகில்) பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | திரு.V.P.தனபால், குளித்தலை. | 4.60 % அதிகம் |
| | | திரு.S.சம்பூர்ணம், குளித்தலை. | 7.03 % அதிகம் |
| 6 | வார்டு எண்.4, காவல்காரதெரு பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | திரு.V.P.தனபால்,குளித்தலை | 4.65 % அதிகம் |
| | | திரு.S.சம்பூர்ணம், குளித்தலை | 7.41 % அதிகம் |
| | **20.01.2022ஆம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்** | | |
| 1 | பெரியார்நகர் தலைமை நீரேற்ற நிலையத்தில் உள்ள பாலம் பழுது சரிசெய்தல் மற்றும் அறையின் மேற்கூரை சரிசெய்தல் | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 5.08 % அதிகம் |
| | | திரு.A.மாதேஸ்வரன் குளித்தலை. | 6.20 % அதிகம் |
| 2 | நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் கசிவை சரிசெய்தல் மற்றும் புதியதாக படிகள் கட்டுதல் | திரு.P.அண்ணாத்துரை குளித்தலை. | 6.20 % அதிகம் |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 5.08 % அதிகம் |
| 3 | சத்தியமங்கலம் உரக்கிடங்கில் மண்புழு உரம் தயாரிக்கம் தொட்டி மற்றும் மேற்கூரை அமைக்கும் பணி செய்தல் | திரு.P.அண்ணாத்துரை குளித்தலை. | 5.28 % அதிகம் |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 4.89 % அதிகம் |
| 4. | குளித்தலை நகராட்சிப் பகுதியில் புதியதாக குடிநீர் குழாய் பொருத்துதல் | திரு.P.அண்ணாத்துரை குளித்தலை. | 6.21 % அதிகம் |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 4.84 % அதிகம் |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதன் எதிரே குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

<u>06.01.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில், கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.</u>

| | | |
|---|---|---|
| 1 | வரிசை எண்.1க்கு M/s.M.R.Dyes Chemicals | மதிப்பீட்டைவிட குறைந்த சதவீதம் |
| 2 | வரிசை எண்.2க்கு M/s.பிரியம் இண்டஸ்ட்ரீஸ் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவீதம் |
| 3 | வரிசை எண்.3க்கு திரு.P.அண்ணாத்துரை | மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ளதில் குறைந்த சதவீதம் |
| 4 | வரிசை எண்.4க்கு திரு.M.செந்தில்குமார், | |
| 5 | வரிசை எண்.5 மற்றும் 6க்கு திரு.V.P.தனபால், | |

<u>20.01.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில், கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.</u>

| | | |
|---|---|---|
| 1 | வரிசை எண்.1 முதல் 4 வரை திரு.M.செந்தில்குமார், | மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ளதில் குறைந்த சதவீதம் |

(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 52 தனியார் தூய்மை பணியாளர்களை 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணிமேற்கொள்ள நகரட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.28369/ஜே3/, நாள்–04.12.2018இல் செயல்முறை ஆணைக்கிணங்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன்பேரில் இந்நகராட்சிமூலம் வழங்கப்பட்ட செயல்முறை உத்தரவு ந.க.எண்.24/2020/எச்1இன்படி, அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்தக்காலம் 20.02.2022இல் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/இ௭–2, நாள்–02.10.2021ன்படி, வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து நிர்வாக அனுமதி வேண்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 20.02.2022ல் முடிவடைய உள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கும் வரையும், அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் உரிமையாளர் 11.01.2022இல் இதே விலை விகிதத்தில் தொடர்ந்து நடத்துவதாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தின் அடிப்படையிலும், நகராட்சி நிதியிழப்பு மற்றும் கால விரையம் ஏற்படுவதை கருத்தில் கொண்டும், சுகாதார பணிகளின் அவசியம் கருதியும், இதே நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் விலை விகித அடிப்படையில் தூய்மை பணிகள் மேற்கொள்ள முன்பு பிறப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தொடர்ந்து 52 ஒப்பந்த அடிப்படையிலான தூய்மை பணியாளர்களை விநியோகம் செய்யவும், அதற்குரிய செலவினத் தொகையை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.24/2020/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும்துப்புரவு பணிகளை தனியார் மயமாக்குதலின் திட்டத்தின்மூலம் தனியார் நிறுவனங்களை நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2, நாள்–26.10.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்–23.11.2016 படியும், இந்நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.25/2020/எச்1–ன்படி 01.02.2021.ஆம் தேதிமுதல் அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், குளித்தலை நிறுவனத்தின்மூலம் துப்புரவு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காணும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் 31.01.2022இல் முடிவடைகிறது. இந்நிலையில் அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் உரிமையாளர் 11.01.2022இல் இதே விலை விகிதத்தில் தொடர்ந்து நடத்துவதாக தெரிவித்து விண்ணப்பித்துள்ளார். இதன்பேரில், நகராட்சி நிதியிழப்பு மற்றும் கால விரையம் ஏற்படுவதை கருத்தில் கொண்டும், சுகாதார பணிகளின் அவசியம் கருதியும், இதே நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் விலை விகித அடிப்படையில் தூய்மை பணிகள் மேற்கொள்ள மேலும் ஓராண்டு காலத்திற்கு (01.02.2022 முதல் 31.01.2023 வரை) முன்பு பிறப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தொடர்ந்து 4 ஒப்பந்த அடிப்படையிலான தூய்மை பணியாளர்களை விநியோகம் செய்யவும், அதற்குரிய செலவினத் தொகையை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.25/2020/எச்1)

பொருள்– 07. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு கொரோனா தடுப்பு பணிக்கு தேவைப்படும் கிருமி நாசினி மற்றும் இதர பொருட்கள் விநியோகம் செய்ய, 20.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | தளவாட சாமான்கள் | மீனாட்சி டிரேடர்ஸ், மதுரை. | விநாயகா டிரேடர்ஸ், மதுரை |
|---|---|---|---|
| | | ரூ. (ஜி.எஸ்.டி.இல்லாமல்) | |
| 1) | Chlorine 34% Bleaching Powder | 55.00 | 40.00 |
| 2) | Hydrated Lime Powder | 13.00 | 9.00 |
| 3) | Lysol Cented (Surface Cleaner) | 290.00 | 200.00 |
| 4) | Hand Sanitizer | 540.00 | 500.00 |
| 5) | Surgical Mask 3 Ply | 7.00 | 4.00 |
| 6) | White Phenyl | 70.00 | 60.00 |
| 7) | Toilet Cleaning Acid | 60.00 | 50.00 |
| 8) | Reflector Jacket | 280.00 | 250.00 |
| 9) | Pick Axe | 395.00 | 320.00 |
| 10) | Coconut Bamboo Milar | 295.00 | 260.00 |
| 11) | Large Fork with Fork Handle | 520.00 | 490.00 |
| 12) | Small Fork with Fork Handle | 340.00 | 300.00 |
| 13) | Aluminium Basket | 398.00 | 375.00 |
| 14) | Hand Gloves (Cotton & Synethetic Mixed) | 145.00 | 120.00 |

அலுவலக குறிப்பு– **1)**. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விநாயகா டிரேடர்ஸ், மதுரை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகள் குறைவாக உள்ளதால் அதனை ஏற்கலாம்.

**2)**. பொது சுகாதாரப்பணிகளின் கொரோனா நோய் தொற்று தடுக்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.650/2021/எச்1)

| | |
|---|---|
| பொருள்– 08. | குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5370 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிசான்று 02.03.2022.ல் முடிவடைவதால், அதனை புதுப்பிக்க பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு உதிரிபாகங்கள் மாற்றம் செய்யவேண்டி உள்ளது. அதற்கான உத்தேச செலவின மதிப்பீடு ரூ.1.25 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.118/2022/எச்1) |
| பொருள்– 09. | குளித்தலை நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண்.TN-47-X-3173 வாகனத்திற்கு காப்பீடு 13.01.2022ல் முடிவடைய உள்ளது. காப்பீடு மீண்டும் ஒரு ஆண்டிற்கு (14.01.2022 to 13.01.2023) புதுப்பித்துக்கொள்ள யுனைடெட் இந்தியா காப்பீடு, குளித்தலை நிறுவனத்திற்கு தொகை ரூ.13770/–யை வருவாய் நிதியிலிருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி காப்பீடு கழகத்திற்கு தொகை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2141/2021/எச்1) |
| பொருள்– 10. | இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு நடவடிக்கையாக கொசு புழுக்களை ஒழிப்பதற்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பரிந்துரைபடி, அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொசுப்புழுக்கொல்லி Abate மருந்து 100–லிட்டர் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.75,000–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1884/2021/எச்1) |
| பொருள்– 11. | குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக கொசு புழுக்களை ஒழிப்பதற்கு 2021–2022.ம் ஆண்டுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் ‘‘பேசில்லஸ் துரின்ஜியென்ஸிஸ்’’ கொசு புழுக்கொல்லி மருந்து 200 கிலோ வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1885/2021/எச்1) |

பொருள்– 12. குளித்தலை நகராட்சியில் அனைத்து பணிகளும் கணனிமயமாக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் இணைத்தின் வாயிலாக நடைபெறுவதால் அதிகவேகம் கொண்ட Internet facility தேவைப்படுகிறது. தற்போது இருப்பது 8MBPS Speed மட்டுமே உள்ளது. 222915 மற்றும் 222961 ஆகிய இரண்டு தொலைபேசி எண்ணிலும் Broad Band (BSNL) இயங்கி வருகிறது. தற்போது BSNL Fibre Connection குளித்தலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. BSNL Fibre Net Rs.6500/- (Total Fixation Charges) பொருத்துவதற்கு மன்ற அனுமதியும், ரூ.6500/– மாதாந்திர கட்டணம் செலுத்த ஏற்படும் உத்தேச செலவினம் செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அங்கீகரிக்கலாம்
2). மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2021–2022 பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.72/2022/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணி (Untied Grant) 2021–2022ல், மலையப்பநகர் கழிப்பிடம் மராமத்து மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு (Untied Grant) 2021–2022ம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளை தேர்வு செய்யும் பொருட்டு, மலையப்பநகர் கழிப்பிடம் மராமத்து மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.11.50 லட்சம் மதிப்பீடு தயார் செய்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் தொழில்நுட்ப அங்கீகாரம் பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

21.01.2022.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 298 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 299 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 300 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 301 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 5 | 5 | 302 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 303 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 304 | அலுவலக குறிப்பு ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 305 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 306 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 307 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 308 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 309 | அங்கீகரித்து, அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 310 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.